கடையும், எந்தக் கட்டடங்களும், அதிலும் குறிப்பாக நியாய விலைக் கடைகள் திறக்கப்படாமல் இருந்ததில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருப்பதை, துறை ரீதியாக ஆய்வு செய்து, அப்படி இருக்கும்பட்சத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

23—

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை

***1405 திருமதி ம. வரலட்சுமி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, மறைமலை நகர் நகராட்சியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்புத் தாயாய், அறிவு ஜீவியாய், அஞ்சாத நெஞ்சமாய், அரசியல் சிங்கமாய், இயக்கத்தின் சங்க நாதமாகத் திகழும் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய முதற்கண் வணக்கம்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதி, மறைமலை நகர் நகராட்சியில், '3 மருத்துவர் வகை' (Three Doctor Type) *தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் செயல்பட்டு வருகின்றது. இம்மருந்தகத்தில், தற்போது 19,497 காப்பீட்டாளர்கள்*

இணைக்கப்பட்டுள்ளனர். மாதம் ஒன்றுக்கு 2,852 காப்பீட்டாளர்கள் மற்றும் குடும்பத்தினர் வெளி நோயாளிகளாக மட்டுமே சிகிச்சை பெற்று வருகின்றனர். தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் விதிமுறைகளின்படி காப்பீட்டாளர்களின் எண்ணிக்கை 50,000—க்கு மிகும் இடங்களில் மட்டுமே மருத்துவமனை அமைக்க முடியும். மேற்படி மருந்தகத்தில், 19,497 காப்பீட்டாளர்களே பதிவு செய்துள்ளதால், மேற்கண்ட இடத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை தொடங்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.

திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழினம் உயர்வதற்காகவும், தமிழர்கள் வாழ்வு வளம்பெற வேண்டும் என்பதற்காகவும், 77 ஆண்டுகளுக்கும் மேலாக தன்னையே அர்ப்பணித்துக்கொண்டு, அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வரும் தரணி போற்றும் தமிழ்த் தாயின் தலைமகன் (மேசையைத் தட்டும் ஒலி) அன்புத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், வீரமிகு தலைவர்கள் வரிசையில் இடம் பெற்ற இளைய சமுதாயத்தின் வீரமிகு தளபதி, (மேசையைத் தட்டும் ஒலி) நமக்கு நாமே நாயகர், நாளைய தமிழகத்தின் நம்பிக்கை, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அன்புத் தளபதி அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, வணங்கி மகிழ்கிறேன்.

முற்பகல் 10-25

செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளரான எனக்கு 1,12,675 வாக்குகள் அளித்து, 26,292 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச் செய்த செங்கல்பட்டு தொகுதியின் வாக்காளர் பெருமக்களுக்கும், எனது வெற்றிக்காக அரும்பாடுபட்ட காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர், ஆலந்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், பாசமிகு அண்ணன் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும் மற்றும் செங்கல்பட்டு தொகுதியிலுள்ள தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சி நிருவாகிகள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, என்னுடைய முதல் உரையைத் தொடங்குகின்றேன்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுமார் 10,000-க்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இதில், சுமார் 3,18,794 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். எனது சட்டமன்றத் தொகுதியில் 2 தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த இரண்டு ஈட்டுறுதி மருந்தகங்களில் முதலுதவி மற்றும் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. ஆனால், தொழிலாளர்களுக்குப் பலத்த காயங்கள் ஏற்படும்போது மேல் சிகிச்சைக்காக செங்கல்பட்டிலிருந்து சுமார் 50 கி.மீ. தொலைவிலுள்ள சென்னை, கே.கே. நகர் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படுகிறார்கள். போக்குவரத்து நெரிசல் மிகுந்த நேரங்களில் தொழிலாளர்களுக்கு உயிர்ப் பலி நேரிடக்கூட வாய்ப்புள்ளது. ஆகவே, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதியைச் சுற்றியுள்ள 8 ஈட்டுறுதி மருந்தகங்களில் பதிவு செய்துள்ள சுமார் 1 இலட்சம் காப்பீட்டாளர்களும் பயன்பெறும்வகையில், காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு மையமாகத் திகழும் செங்கல்பட்டு தொகுதியில், மறைமலைநகர் நகராட்சியில் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பேசிய மாண்புமிகு செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அவர்கள் செங்கல்பட்டு தொகுதியில் 10,000-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இருக்கின்றன என்று பேசினார்கள். இது உண்மையாக இருக்குமா என்பதைப் பற்றி நான் எதுவும் சொல்லவில்லை. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 10 அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. அதாவது, படப்பை, செங்கல்பட்டு, கேளம்பாக்கம், ஸ்ரீபெரும்புதூர், நந்தம்பாக்கம், ஒரகடம், மதுராந்தகம், மறைமலைநகர், காஞ்சிபுரம், தாம்பரம் ஆகிய 10 இடங்களில் dispensaries நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒரு மருத்துவமனை செயல்பட வேண்டுமென்றால், அதற்கு சில அடிப்படை விதிகள் இருக்கின்றன. 4-12-2014 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகத்தின் 163-வது கூட்டத்தில் எடுக்கப்பட்ட

முடிவின்படி, 50,000 மற்றும் அதற்கு மேற்பட்ட காப்பீட்டாளர்கள் உள்ள இடங்களில் மட்டுமே அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க முடியும். மாண்புமிகு உறுப்பினரின் தொகுதியில் காப்பீட்டாளர்களின் எண்ணிக்கை 50,000-த்திற்கு மிகும்போது, அங்கு 100 படுக்கைகள் கொண்ட அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை தொடங்குவது குறித்து மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்று, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.*

திருமதி ம. வரலட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் சிரமப்பட்டு வருகின்றார்கள். ஆகவே, தொழிலாளர்கள் நலனைக் கருதி, செங்கல்பட்டு தொகுதியில் அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனையைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், செங்கல்பட்டு தொகுதியிலுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையை மட்டும் கருத்தில் கொள்ளாமல், அதற்கு அருகிலுள்ள ஒரகடம், மதுராந்தகம் மற்றும் கேளம்பாக்கம் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர்களையும் சேர்த்தால் அந்த எண்ணிக்கை வரும். எனவே, செங்கல்பட்டு தொகுதியில் மருத்துவமனையை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மேலும், மதுராந்தகத்தில் 3 மருத்துவர்கள் இருக்கும் மருந்தகத்தை 10 மருத்துவர்கள் மற்றும் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதியில் 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆனால், அந்தத் தொழிலாளர்கள் இ.எஸ்.ஐ. திட்டத்தில் பதிவு செய்திருக்க வேண்டும். ஒவ்வொரு*

பகுதியிலும் 50,000-க்கும் மேற்பட்டோர் பதிவு செய்திருந்தால்தான் அங்கு மருத்துவமனை தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

24—

சொந்தக் கட்டடம்

***1454 திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரத்திலுள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இதயமே ரோஜாவானால் எண்ணம் அனைத்தும் நறுமணம் ஆகும்" என்ற வரிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி, எங்கள் அம்மா அவர்களுக்கு மட்டுமே பொருந்தும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி, எனது பதிலைத் தெரிவிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒட்டன்சத்திரம் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு விருப்பாட்சி கிராமம் புல எண் 136/1-ல் உள்ள 1.32 ஹெக்டேர் நிலம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிலத்தினை போக்குவரத்துத் துறைக்கு நில மாற்றம் செய்யுமாறு மாவட்ட